**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.89/2019**

**Name** : Chokkalingam
**Father/Husband Name** : Veeraragavan

**Age** : 71

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 4.10 p.m**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் 2012 ல் மே மாதம் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். நான் வேலையில் இருக்கும்போதிலிருந்து தற்போது வரை வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள 2017-2018 க்கான வருமான வரி தாக்கலில் எங்காவது ஏற்கனவே எனக்கு எவ்வளவு கையிருப்பு உள்ளது என்றும் வங்கி கணக்கு உள்ளது என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய மொத்த வருமானம் ரூ.4,71,729/- என்றால் சரிதான். அதற்கு எவ்வளவு வருமான வரி கட்டினேன் என்று சொல்ல முடியுமா என்றால் நினைவில்லை வரி கட்டியதற்கான சலான் தாக்கல் செய்துள்ளேன்.

2018-2019 க்கான வருமான வரி கட்டினேன் என்றால் சரிதான். இதில் என்னுடைய மொத்த கையிருப்பு ரூ.41,410/- என்றால் சரிதான். வங்கியிருப்பு ரூ.6,49,797/- என்றால் சரிதான். மேற்படி கணக்கானது 31.03.2018 நாள் வரைதான். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி 11.04.2018. 11.04.2018 ல் என்னுடைய மொத்த கையிருப்பு ரூ.41,410/- தான் என்றால் 31.03.2018 வரை

அந்த கணக்கு சரி அதன் பின்னர் என்னுடைய நிலத்தை விற்ற அந்த தொகையை நான் கையில் வைத்திருந்தேன்.

விற்பனை ஒப்பந்த அடிப்படையில் பணம் வைத்திருந்தேன். எந்த தேதியில் ஒப்பந்தம் போட்டேன் என்றால் 05.04.2018 ல் என்னுடைய நிலத்தை விலை பேசி ரூபாய் பெற்றுகொண்டேன். 2 நிலங்கள் அதில் 1 நிலம் –குணசேகரன் என்பவருக்கு ரூ.27,50,000/– 2 வது நிலம் நாகேஷ் என்பவருக்கு ரூ.25,00,000/– க்கு விற்றேன். எந்தெந்த சர்வே எண் எந்த நம்பருக்கு கொடுத்தேன் என்றால் சர்வே எண் நினைவில்லை.

எப்போது விற்பனை பத்திரம் பதிவு செய்தேன் என்றால் பத்திரம் பதிவு செய்யப்படவில்லை, உள்ளூர் பிரமுகர்கள் முன்னிலையில் பேசி சுவாதீனத்தை கொடுத்து விட்டேன். அந்த அக்ரிமெண்ட் யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழி ஒப்பந்தம் தான். எந்த ஒரு பண பரிவர்த்தனையும் ரூ.20,000/– பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும் என்றாலும் நாங்கள் ரூ.25,00,000 மற்றும் 27,50,000/– யை வங்கி மூலம் அல்லாமல் ரொக்கமாக பெற்று கொள்ள சாத்திய கூறுகள் இல்லை என்றாலும் சரியல்ல நான் ரொக்கமாகதான் பெற்று கொண்டேன்.

பணம் யார் வாங்கியது என்றால் நான்தான் வாங்கினேன். அன்றைய தேதிக்கு இந்த நிலம் விற்பனை செய்த பணம் மட்டும் தான் என்னிடம் கையிருப்பில் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் காட்பாடியில் காங்கேயநல்லூரில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்பட்ட பட்டியல் படி காங்கேயநல்லூர் வீட்டை ரூ. 36,04,530/– க்கு கிரயம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான், அது என்னுடைய பணி ஓய்வு பணிக்கொடை மூலமாக பெறப்பட்டது.

நான் சொல்வது தவறு என்றாலும் என் பணி கொடையாக வந்த பணத்தை கையில் வைத்துக்கொள்ள சாத்திய கூறுகள் இல்லை என்றாலும் அதுவும் வருமான வரி கணக்கில் காட்டப்பட கூடியது என்றாலும் சரியல்ல.

காங்கேயநல்லூரில் வாங்கிய கட்டிடத்திற்கு வருமான வரியில் காட்டியுள்ளேன். அவ்வாறு காட்டியிருந்தால் இந்த பட்டியலில் வந்திருக்கும் என்றால் சரியல்ல, 2013 ல் வாங்கப்பட்டது எனவே 2014–2015 கணக்கில் வரும். (21.03.2013 ல் வாங்கியது asset ல் காட்டப்பட்டுள்ளது என்றும் இந்த கேள்வி தவறானது என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

2019–2020 க்கு என்னுடைய கணக்கில் பணமே கிடையாது என்றாலும் அவ்வாறு பணம் இருந்திருந்தால் என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டியிருக்க வேண்டும் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, நான் வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன், அந்த வரவு வழிமுறைகளிலும் காட்டியுள்ளேன். வருமான வரி கட்டிய சலானையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதன் விவரம் நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள 2019–2020 க்கான ஆவணத்தில் ஆடிட்டர் கையெழுத்து இல்லை என்பதாலும் கட்டிய சலான் இல்லை என்பதாலும் அது உண்மை இல்லை என்றாலும் போலியானது என்றாலும் தவறு.

ஒருவருக்கு லோன் கொடுத்தால் யாருக்கு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று வருமான வரியில் காட்ட வேண்டும் என்றால் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் balance sheet ல் தனி நபர் கையெழுத்து வராது. என்னுடைய ledger extract தாக்கல் செய்தால் தான் நான் யாருக்கு எந்த தேதியில் பணம் கொடுத்த விவரம் தெரியும் என்றால் ஆடிட்டரிடம் கொடுத்து விட்டேன். அதை வைத்து தான் என்னுடைய balance sheet தாக்கல் செய்தேன். எந்த தேதி வரை ஆடிட்டரிடம் கொடுத்த தஸ்தா வேஜ் ஆவணங்களை திருப்பி வாங்கிவட்டேனா என்றால் நான் கேட்கவும் இல்லை அவர் கொடுக்கவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி பட்டியல்கள் அனைத்தும் தாக்கல் செய்த விவரம் தவிர அது வருமான வரி துறையினரால் அங்கீகரிக்கப்பட்டதற்கான அத்தாட்சி எதுவும் தாக்கல் செய்யிவல்லை என்றால் நினைவில்லை.

**விசாரணை முடிந்த நேரம்:** 04.45 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.